தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (28-4-1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

142. கோரிக்கை எண். 30— சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

143. 1986-87 ஆம் ஆண்டிற்கான சமூக நலத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

144. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செயல் முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை (தமிழ்).

145. பொது நிறுவனங்களின் செயலாக்கம் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை (தமிழ்).

146. 1985–86 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).